# குழந்தைகளுக்கு வேதாகமம் வழங்குபவர்



# இயேசுவுக்கு ஒரு கஷ்டமான நேரம்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Byron Unger; Lazarus

தழுவியவர்: M. Maillot; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2017 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

இயேசு
ஞானஸ்நானம்
பெற்றபோது
தேவன்
பேசினார்.



அவர் சொன்னது,
"இவர் என்னுடைய நேசகுமாரன். இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்."
பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் புறாவை போல் இறங்கினார்.




அதன் பின்பு,
தேவனுடைய ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்துக்கு அழைத்துச்சென்றார். அங்கே அவர் தனிமையாயிருந்தார்.


இயேசு நாற்பது நாட்கள்
உபவாசித்தார். அப்படியென்றால்
அவர் உணவு ஒன்றும்
சாப்பிடவில்லை. அவருக்கு
மிகுந்த பசி
உண்டாயிற்று.

அங்கே காட்டு மிருங்கள் இருந்ததாக வேதாகமம் கூறுகிறது.



சாத்தான் இயேசுவை சோதிக்க வந்தான், நீண்ட நாட்களுக்கு முன்பு ஏதேன் தோட்டத்தில் அவன் ஆதாமையும், ஏவாளையும், தேவனுக்கு கீழ்ப்படியாதபடி சோதித்தான்.





இப்போது இயேசுவும் சோதிக்கப்படுகிறார்.


தேவனுடைய குமாரனாகிய இயேசுவையும் சாத்தான் சோதிக்க முயற்சி
பண்ணினான்.



நீ தேவனுடைய குமாரனானால், "இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி செய்யும்," என்றான். இயேசு பசியாயிருக்கிறார் என்று

அவனுக்குத்தெரியும்.



தேவகுமாரனாலே கல்லுகளை அப்பங்களாக மாற்ற முடியும் என்று அவனுக்குத் தெரியும். இயேசு சாத்தானுக்கு கீழ்ப்படிவாரா?

இல்லை! இயேசு சாத்தானுக்கு கீழ்ப்படியவில்லை. பதிலாக, தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர் பதில் கொடுத்தார்.



"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல,
தேவனுடைய வாயிலிருந்து புறப்படும்
ஒவ்வொரு வார்த்தையினாலும்
பிழைப்பான்."



பின்பு சாத்தான் இயேசுவை ஜனங்கள் தேவனைத்தொழுது கொள்ளுகிற எருசலேம் பட்டணத்தின் தேவாலயத்திற்கு அழைத்துச்



சென்றான்.

அடுத்து சாத்தான் என்ன செய்வான்?


"நீர் தேவனுடைய குமாரனானால்,
தாழக்குதியும், என்று சாத்தான்
சொன்னான்? தேவதூதர்கள்
உம்மை காப்பார்கள் என்று
தேவவசனம் கூறுகிறது."

"இல்லை!"  இயேசு சொன்னார்.  "உன் தேவனை பரீட்சை பாராதிருப்பாயாக ... என்றும் எழுதப்பட்டிருக்கிறது."





சாத்தான் இன்னுமொருமுறை
முயற்சித்தான். அவன் இயேசுவை
பட்டணத்தின் மலை உச்சிக்கு
எடுத்துச் சென்றான்.


பூலோக ராஜ்ஜியத்தியன் மகிமையெல்லாம்
இயேசுவுக்கு காண்பித்து,
சாத்தான் சொன்னான், "தாழப்
பணிந்து என்னை ஆராதனை
செய்தால், இவைகளை
யெல்லாம் உனக்குத்
தருவேன்,"
என்றான்.

"என் பின்னாலே போ சாத்தானே" என்று இயேசு கட்டளையிட்டார்.



"வேதத்தில் எழுதியிருக்கிறது ... உன் தேவனை ஆராதனை செய்து, அவர் ஒருவருக்கு மாத்திரம் ஊழியம் செய்."



கொஞ்ச நாட்களுக்கு
சாத்தான்
இயேசுவை விட்டு
விலகியிருந்தான்.
பின்பு ஒரு
அருமையான
காரியம்
நடைபெற்றது.



சாத்தானுக்கு
கீழ்ப்படியாத
தன்னுடைய
குமாரனாகிய
இயேசுவுக்கு
தேவன்
தேவதூதர்களை
அனுப்பி
சேவை
செய்தார்.



இயேசுவுக்கு ஒரு கஷ்டமான நேரம்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

மத்தேயு 4, லூக்கா 4

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16